# ஈழத்தில் கோவிலை மையப்படுத்திய காத்தவராயன் கூத்து மரபு

செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்
பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

கூத்து என்பது நிகழ்த்திக்காட்டப்படும் ஒரு கலையாகும். இலங்கையில் வடமோடி, தென்மோடி, சிந்துநடை எனக் கூத்து வடிவங்கள் பல நிலைகளில் பயிலப்பட்டு வருகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் ஆற்றுகை செய்யப்படும் கூத்துக்களை சமயம்சார் கூத்துக்கள், வரலாறுசார் கூத்துக்கள், சமூகம்சார் கூத்துக்கள் என மூன்று நிலைகளில் நோக்கலாம்.

கத்தோலிக்கச் சமயத்தளத்தில் சமயநிலைக் கூத்துக் களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது அதிகமாகக் காணப்ப டுகின்றது. இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க ஆலயங்களில் கூத்துக்களை ஆற்றுகை செய்யவென மேடைகள் நிரந்தரமாக அமைக்கப்பட்டமையும் வரலாறாகும். ஞானசவுந்தரி, சந்தியோகுமையூர் முதலிய பல நாட்டுக் கூத்துக்கள் இன்றும் கத்தோலிக்க தளத்தில் ஆலயங்களில் ஆடப்படுகின்றன.

இந்து சமய தளத்தில் நாட்டுக்கூத்துக்கள் ஆடப்படு வதற்கான சந்தர்ப்பங்கள் ஒப்பீட்டளவில் குறைவு என்றே கூறலாம். சமூகத்தின் ஆணிவேரான அடிநிலை மக்களின் கலையாக இது பார்க்கப்பட்டமையும் இதற்குரிய காரணங்களுள் ஒன்று ஆகும். காத்தவராயன், கோவலன் கூத்து, வசந்தன் கூத்து, பப்பவராயன் கூத்து முதலியவற்றை இங்கு உதாரணமாகச் சுட்டலாம். வரலாறு சார்ந்த தளத்தில் சங்கிலியன், கண்டியரசன் முதலிய கூத்துக்கள் ஆடப்படுகின்றன. சமூகத்தளத்தில் பவளக்கொடி முதலிய கூத்துக்கள் ஆடப்படுகின்றன.

கோவிலை மையப்படுத்தியே பெரும்பாலான கலை கள் இன்றும் வளர்ந்த வண்ணம் உள்ளன. இதற்குக் கூத்துக் கலையும் விதிவிலக்காக முடியாது. கோவிலை மையப்படுத்திய கூத்துக்களை வளர்த்ததில் கிராமங்களின் பங்கு முக்கியமானதாகும். வட்டுக்கோட்டை, அரியாலை, பளை, மாதனை, நீர்வேலி, அல்வாய், சாவகச்சேரி, முல்லைத்தீவு முதலிய இடங்கள் இந்து சமயத்தளத்திலான கூத்துக்கலைக்குப் பிரபலம் பெற்ற இடங்களாக விளங்குகின்றன. இந்து சமயத் தளத்தில் பிரபலம் பெற்ற கூத்தாகக் காத்தவராயன் கூத்தே விளங்குகின்றது. .

தமிழகத்தில் சிறுதெய்வ வழிபாட்டுக்குரிய தெய்வமாகச் சித்திரிக்கப்படும் காத்தவராயன் இலங்கையிலும் வழிபடு தெய்வமாகப் பூசிக்கப்படுகின்றார். காத்தவராயன் கதை மூன்று நிலைகளில் பேணப்படுகின்றது என ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். பூசாரி காத்தவராயன் உருவேறி ஆடுதல், காத்தவராயன் கதாகலாட்சேபம், பலர் சேர்ந்து கூத்தாகக் காத்தவராயன் கதையை ஆடுதல் என மூன்று நிலைகளைச் சுட்டுகின்றனர்.

இந்து சமயத் தளத்தில் மழை வேண்டி அல்லது நோய் நீக்கம் வேண்டி நேர்த்திக் கடனாகக் கூத்து ஆடப்படும் மரபு காணப்படுகின்றது. நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவிலில் கூத்து ஆடப்படும் போது அம்மன் வந்திருந்து கூத்துப் பார்ப்பதாகக் கருதி கதிரை ஒன்றை பிரத்தியேகமாக அமைத்துவிடும் மரபும் காணப்படுகின்றது.

காத்தவராயன் கூத்து ஆடப்படும் போது ஆற்றுகை செய்பவர்கள் இடுப்பில் வேப்பிலை கட்டியவாறு ஆடும் மரபும் உள்ளது. கதையில் வரும் மாரியை மழைத்தெய்வமாகக் கருதி வாழ்வின் ஆதாரமாக அமைந்துள்ள மழையை நினைத்து வரம் வேண்டுவதாக முத்துமாரியை நினைத்து கூத்து ஆடப்படும் வழக்கமும் காணப்படுகின்றது. இது முத்துமாரி அம்மன் வழிபாட்டிற்கும் வழிகோலியது.

காத்தவராயன் கதை கொண்டிருக்கின்ற செல்வாக்கின் காரணமாக அது திரைப்படமாகவும் வெளிவந்தது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இதில் பிரதான பாத்திரம் ஏற்றிருந்தார்.

காத்தவராயன் கூத்தின் போது சமயம் சார்ந்த சடங்கா சாரங்களைப் பேணும் நிலையையும் காண முடிகின்றது. காப்புப் படிக்கும் போது பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும் கூத்து ஆறு மணி நேரங்களுக்கும் மேலாக ஆடப்பட்டுப் பித்தா பிறை சூடி என்ற தேவாரப்பாடலுடன் நிறைவடையும். காப்புப் பாடலின் பின்னர் கூத்து அவையை விட்டு யாரும் வெளியே செல்லக் கூடாது என்ற நம்பிக்கையும் மக்கள் மனத்தில் உள்ளது.

காத்தவராயன் போன்ற கதைகளில் சிறு தெய்வங்களுக்கே முக்கியத்துவம் அதிகம். சிவன் திருமால் போன்ற பெருந்தெய்வங்களும் கதையில் இடம்பெறுகின்றனர். ஆனால் அவர்கள் அடிநிலைப் பழக்கங்களைக் கொண்டவர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக காத்தவராயன்